# முதல்வரை அமெரிக்க வாழ் தமிழர்கள் அன்பு தவழ வழியனுப்பிய காட்சி!



அமெரிக்காவில் கழகக் கொடியை பறக்கச் செய்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை வழியனுப்பி வைத்த அமெரிக்க வாழ் தமிழர்கள்.



அமெரிக்கத் தமிழர்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை பாசம் பொங்க சிகாகோ விமான நிலையத்தில் வழி அனுப்பி வைத்த உணர்ச்சி மிக்க காட்சி.






தமிழ்நாட்டிற்கு அதிக அளவிலான தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அமெரிக்காவில் அரசு முறை பயணம் மேற்கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், உலகின் முன்னணி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டு, உலகளவில் பல்வேறு முன்னணி நிறுவனங்களின் உயர் அலுவலர்களை சந்தித்து தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்து, வெற்றிகரமாக தனது பயணத்தை முடித்துக் கொண்டு சென்னைக்கு புறப்பட்டபோது, முதலமைச்சர் அவர்களை சிகாகோ விமான நிலையத்தில் அமெரிக்க வாழ் தமிழர்கள் உற்சாகமாக வழியனுப்பி வைத்தார்கள்.

### சென்னை மெட்ரோ ரயில் திட்டம் -IIக்கு இதுவரை மாநில அரசின் செலவு ரூ.18,564 கோடி!

# ஒன்றிய அரசு வழங்க வேண்டிய உரிய நிதியை உடனே வழங்க வேண்டும்!

## ஒன்றிய நிதிஅமைச்சருக்கு அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தல்!

சென்னை, செப் 15-

**சென்னை மெட்ரோ ரயில் திட்டம்-IIக்கு இது வரை மேற்கொள்ளப்பட்டுள்ள செலவு ரூ.18,564 கோடி - ஒன்றிய அரசு உரிய நிதி பங்களிப்பினை வழங்கிட வேண்டும் என்று நிதித் துறை மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அறிக்கை வலியுறுத்தியுள் ளார்.**



**அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி வருமாறு:**

கோவையில் பத்திரிக்கையாளர் சந்திப்பின் போது பேசிய ஒன்றிய நிதிஅமைச்சர் திருமதி நிர் மலா சீதாராமன் அவர்கள் சென்னை மெட்ரோ ரயில்-II திட்டத்திற்கு ரூ.21,000 கோடி கடனுத வியை ஒன்றிய அரசு பெற்றுத் தந்தது என்றும், அதில் ரூ.5,880 கோடி மட்டுமே தமிழ்நாடு அரசு செலவு மேற்கொண்டுள்ளது என்றும் தெரிவித் துள்ளார். இது தொடர்பான பின்வரும் சரியான மற்றும் முழுமையான தகவல்களை தெரிவிக்க வேண்டியது என்னுடைய கடமையாகும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொலைநோக்கு பார்வையோடு சென்னையின் எதிர்கால போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் கொண்டு வரப்பட்ட இந்த முன்னோ டித் திட்டத்தின் முதல் கட்டம் வெற்றிகரமாக நிறை வேற்றப்பட்டது. இதன் தொடர்ச்சியாக இத்திட்டத் தின் 2-வது கட்டம் ஏப்ரல் 2017-ம் ஆண்டு தமிழ்நாடு அரசால் ஒன்றிய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது.

**மாநில, ஒன்றிய அரசின் 50:50 பங்களிப்பு என பரிந்துரை!**

இந்தியாவில் இதுவரை நடைமுறைப்படுத்தப் பட்ட மெட்ரோ ரயில் திட்டங்களிலேயே மிகப் பெரிய திட்டமாக 3 வழித்தடங்களுடன் 119 கி.மீ. நீளத்திலான மெட்ரோ ரயில் திட்டம் குறித்த ஒரு விரிவான திட்ட அறிக்கையினை மாநில மற்றும் ஒன்றிய அரசின் 50:50 என்ற சமபங்களிப்பு அடிப்படையில் இரு தரப்பு மற்றும் பன்னாட்டு நிதி நிறுவனங்களின் நிதியுதவி பெறுவதற்காக ஜன வரி 2019-ல் பரிந்துரை செய்யப்பட்டது.

ஒன்றிய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர விவகா ரங்களுக்கான அமைச்சகத்தின் மெட்ரோ ரயில் திட்டங்களுக்கான செலவு மதிப்பீடுகளின் அளவு கோலுக்கான அறிக்கையின் அடிப்படையில் அமைச்சகத்துடன் கலந்தாலோசித்து 2020-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2-ஆம் கட்டத்தின் திட்ட மதிப்பீடு ரூ.63,246 கோடியாக மதிப்பிடப்பட்டது.

ஒன்றிய நிதி அமைச்சர் அவர்கள் சென்னை மெட்ரோ ரயில் கட்டம்-II, State Sector Project- ஆக நடைமுறைப்படுத்தப்படுவதாக குறிப்பிட் டுள்ளார்.

**மெட்ரோ ரயில் திட்டப் பணிகள் தாமதமின்றி செயல்பட நடவடிக்கை!**

இது குறித்த சரியான விவரத்தை அவருக்கு தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன். 2017-ஆம் ஆண்டு இத்திட்டத்தை ஒரு Central Sector Project ஆகவே நடைமுறைப்படுத்த தமிழ்நாடு அரசால் பரிந்துரை செய்யப்பட்டு ஒன்றிய அரசுக்கு அனுப் பப்பட்டது. பின்னர் ஜப்பான் நாட்டின் நிதி வழங் கும் JICA நிறுவனம் 2018-ஆம் ஆண்டு இத்திட் டத்தினை விரைந்து துவக்க கடன் ஒப்பந்தத்தை உடனடியாக கையெழுத்திட வேண்டும் என்று கேட்டுக் கொண்டதன் அடிப்படையில், ஏற்க னவே ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்ட திட்ட அறிக்கை ஒன்றிய அரசின் பரிசீலனையில் இருந்ததால், கடன் ஒப்பந்தத்தை குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் இறுதி செய்ய வேண்டிய சூழ்நிலை யில், இத்திட்டத்தினை ஒன்றிய அரசின் Central Sector Project எனும் ஒப்புதலை எதிர்நோக்கி, காலதாமதத்தை தவிர்க்கும் நோக்கிலும் பொது மக்கள் நலன் கருதியும் தமிழ்நாடு அரசே இம்மா பெரும் திட்டத்தை செயல்படுத்தத் தொடங்கியது. இந்த வழிமுறையை ஒன்றிய அரசும் ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில் இத்திட்டம் ஒன்றிய அரசின் 17.08.2021 அன்று நடைபெற்ற பொது முதலீட்டு குழுவின் (Public Investment Board) கூட்டத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டு, இத்திட்டம் Central Sector Project ஆக செயல்படுத்த ஒன்றிய அமைச்சரவைக்கு முன் மொழிந்தது என்பதை ஒன்றிய நிதியமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வர விழைகிறேன்.

ஒன்றிய நிதி அமைச்சர் அவர்களை நாங்கள் கேட்டுக் கொள்வதெல்லாம் ஒன்றிய அரசின் பொது முதலீட்டுக் குழு பரிந்துரைத்தபடி சென்னை மெட்ரோ ரயிலின் 2-வது கட்ட திட்டத்தினை, Central Sector Project ஆக அங்கீகரித்து ஒன்றிய அரசின் பங்கான ரூ.7,425 கோடியினை உடனடியாக வழங்கிட வேண்டும் என்பதேயாகும்.

**ஒன்றிய அரசு அங்கீகரித்த பங்கினை விரைந்து வழங்க வேண்டும்!**

மேலும் ஒன்றிய நிதி அமைச்சர் அவர்கள் ரூ.21,000 கோடி வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் கடன்களாக ஏற்பாடு செய்து தரப்பட்டுள்ள போதிலும் தமிழ்நாடு அரசு ரூ.5,880 கோடி மட்டுமே செலவு செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். உண்மையில் இது வரை இத்திட்டத்திற்காக ரூ.18,564 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு அரசு இதுவரை தனது சொந்த நிதியிலிருந்து செலவிட்டுள்ள தொகை ரூ.11,762 கோடியாகும். வெளிநாட்டு நிதி நிறுவனங் களிடமிருந்து பெற்ற கடன் மூலமாக மேற்கொள்ளப் பட்ட செலவு ரூ.6,802 கோடியாகும். ஆனால் ஒன் றிய அரசின் பங்கான பொது முதலீட்டுக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட ஒன்றிய அரசின் பங்கான ரூ.7,425 கோடியில் ஒரு ரூபாய் கூட ஒன்றிய அர சால் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

> **நடப்பாண்டு நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டிற்கு ஏன் மேற்குறிப்பிட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை? தமிழ்நாடு ஏன் மாற்றாந்தாய் பிள்ளையாக நடத்தப்படுகிறது? அரசியல் காரணங்களுக்காக பொது மக்கள் பாதிக்கப்படும் வகையில் திட்டங்களை தொய்வுப்படுத்தவும், மாநில அரசிற்கு நிதி நெருக்கடியை ஏற்படுத்தவும் இவ்வாறு செய்யப்படு கிறதோ என்று நமக்கு ஐயம் ஏற்படுகிறது.**

**ஒன்றிய நிதியமைச்சர் தமிழ்நாட்டை புறக்கணிப்பு பட்ஜெட் தாக்கல்!**

தமிழ்நாடு எவ்வாறு வஞ்சிக்கப்படுகிறது என்பதை இன்னும் குறிப்பிட்டு சொல்ல வேண்டுமென்றால் 2021-22ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் போது ஒன்றிய நிதி அமைச்சர் அவர்கள் இந்தியாவில் நடைபெறும் மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு நிதி ஒதுக் கீடு குறித்து பேசும்போது கொச்சி, சென்னை, பெங்க ளூர், நாக்பூர் மற்றும் நாசிக் ஆகிய 5 நகரங்களுக்கு உரிய நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவித்தார். இந்த அறிவிப்புக்கு பின்பு பெங்களுருக்கு ரூபாய் 30,399 கோடி, கொச்சி நகரத்திற்கு ரூபாய் 1957 கோடி, நாக்பூர் நகரத்திற்கு ரூபாய் 6708 கோடி, பூனே நகரத்திற்கு ரூபாய் 910 கோடி, தானே நகரத்திற்கு ரூபாய் 12,200 கோடி மதிப்பீடு கொண்ட திட்டங்களுக்கு ஒன்றிய அரசு Central Sector Project அடிப்படையிலேயே ஒப்புதல் வழங்கி உள்ளது. ஆனால் இதுவரை சென்னைக்கு எவ்வித நிதி ஒதுக் கீடும் ஒன்றிய அரசு செய்யவில்லை.

மேலும், 2024-25 ஆண்டின் நிதிநிலை அறிக் கையில் மகாராஷ்டிரா, புதுதில்லி, குஜராத், கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களுக்கெல்லாம் உரிய நிதி மற்றும் சார்நிலைக்கடன் (Equity and Subordinate Debt) ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் தமிழ்நாட்டிற்கு ஒன் றிய அரசின் இந்த நிதி ஒதுக்கீடு பற்றி எதுவும் குறிப்பி டப்படவில்லை.

**திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் தமிழ்நாடு அரசின் கோரிக்கையை நிறைவேற்றுக!**

நடப்பாண்டு நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட் டிற்கு ஏன் மேற்குறிப்பிட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட வில்லை? தமிழ்நாடு ஏன் மாற்றாந்தாய் பிள்ளையாக நடத்தப்படுகிறது? அரசியல் காரணங்களுக்காக பொது மக்கள் பாதிக்கப்படும் வகையில் திட்டங்களை தொய் வுப்படுத்தவும், மாநில அரசிற்கு நிதி நெருக்கடியை ஏற்படுத்தவும் இவ்வாறு செய்யப்படுகிறதோ என்று நமக்கு ஐயம் ஏற்படுகிறது.

எனவே இந்த ஐயத்தை எல்லாம் போக்கும் வண் ணம் தமிழ்நாடு அரசின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றும் இத்திட்டத்தினை தமிழ்நாடு அரசு சிறப்பாக நடைமுறைப்படுத்தி வருவதை கருத்தில் கொண்டும் ஏற்கனவே பொது முதலீட்டுக் குழு (PIB) பரிந்துரைத் துள்ளபடி தனது பங்கான ரூ.7,425 கோடியை ஒன் றிய அரசு வழங்கிட வேண்டுமென்றும், இத்திட்டத்தை Central Sector Project ஆக நடைமுறைப்படுத்துவதன் மூலம் தமிழ்நாடு அரசின் கடன் சுமையைக் குறைத் திட வழிவகை செய்திடவும், ஒன்றிய நிதி அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு செய்தியாளருடனான பேட்டியில் கூறினார்.

### தமிழ்நாட்டில் மீண்டும் தனது

# உற்பத்தியைத் தொடங்குவதற்கு ஃபோர்டு நிறுவனம் முன்வந்துள்ளது!

சென்னை,செப்.15-

ஃபோர்டு நிறுவனம் உலகெங்கி லும் செயல்படும் முன்னணி ஆட்டோ மொபைல் உற்பத்தியாளர் நிறுவனம் ஆகும். ஃபோர்டு மோட்டார் நிறுவனம் அமெரிக்காவின் மிச்சிகனில் உள்ள டியர்பார்னை தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகிறது. ஃபோர்டு அதன் உலகளாவிய தொழில்நுட்பம் மற்றும் வணிக தீர்வு மையத்தை சென்னையில் கொண்டுள்ளது, இம் மையத்தில் ஆயிரக்கணக்கான பணி யாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

அமெரிக்க நாட்டின் ஃபோர்டு மோட்டார் கார்ப்பரேஷன் நிறுவனத்திற் குச் சொந்தமான ஃபோர்டு இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தொழிற்சாலை 1700 கோடி ரூபாய் முதலீட்டில் செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகரில் நிறுவப்பட்டு




1999ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் திறந்து வைக் கப்பட்டது. இத்தொழிற்சாலையில், ஃபோர்டு ஐகான், ஃபோர்டு என்டவர், ஃபோர்டு ப்யூஷன், ஃபோர்டு ஃபியஸ்டா ரகக் கார்கள் தயாரிக்கப் பட்டு பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது.

ஃபோர்டு இந்தியா தொழிற்சா லையை 1,500 கோடி ரூபாய் கூடுதல் முதலீட்டில் விரிவாக்கம் செய்திடவும் புதிதாக என்ஜின் தயாரிப்புத் தொழிற் சாலை நிறுவிடவும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் கடந்த 2009ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஃபோர்டு இந்தியா பிரை வேட் லிமிடெட் நிறுவனத்தோடு கையெழுத்தானது. இதன்மூலம் அத்தொழிற்சாலையின் உற்பத்தித்தி றன் இருமடங்காக உயர்ந்ததுடன், ஆண்டு ஒன்றுக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் கார் என்ஜின்களைத் தயாரிக் கவும் தொடங்கியது.

தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடு களை ஈர்ப்பதற்காக அமெரிக்கா விற்கு அரசு முறை பயணம் மேற் கொண்ட முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், 10.9.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோ வில், ஃபோர்டு நிறுவனத்தின் உயர் அலுவலர்களை சந்தித்து, தமிழ்நா ட்டில் உற்பத்தியை மீண்டும் மேற் கொள்ள வேண்டும் என்றும், அவர்க ளது உலகளாவிய திறன் மையத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக, ஃபோர்டு நிறுவனம் தமிழ்நாட்டில் மீண்டும் தனது உற்பத்தியை தொடங்குவதற்கு முன்வந்துள்ளது. இதன்வாயிலாக பல்லாயிரக்கணக்கான இளைஞர்க ளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வழி வகை ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் உலகத்தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகள் குறித்தும், திறன்மிக்க இளைஞர் சக்தி குறித் தும், உலக அளவில் ஏற்பட்டு வரும் தொழில்நுட்பத்தின் அதிவேக வளர்ச் சிக்கு ஏற்ப, தமிழகத்தின் தொழில் துறையில் மேற்கொண்டுள்ள மாற் றங்கள் குறித்தும், உலகளாவிய திறன் மையம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகிய துறைகளில் வளர்ச்சி பெற்று வருவது குறித்தும், இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாட்டினை, 2030ஆம் ஆண்டிற்குள் ஒரு டிரில்லி யன் அமெரிக்க டாலர் என்கிற பொரு ளாதார இலக்கை நிர்ணயித்து, அதனை அடைவதற்கான நடவடிக் கைகளை மேற்கொண்டு வருவது குறித்தும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஃபோர்டு நிறுவனத்தின் உயர் அலுவலர்களிடம் எடுத்துரைத் ததன் பலனாக ஃபோர்டு நிறுவனம் தமிழ்நாட்டில் மீண்டும் தனது உற்பத் தியை தொடங்க முன்வந்துள்ளது.

உற்பத்தி நிறுவனம் ஒன்று தனது உற்பத்தியை நிறுத்திய பிறகு, அதே மாநிலத்தில் மீண்டும் தனது உற்பத் தியை தொடங்குவது என்பது அரிதா னதாகும்.

ஃபோர்டு நிறுவனம் மீண்டும் தனது உற்பத்தியை தமிழ்நாட்டில் தொடங்கவுள்ளதன் மூலம் ஆசியா வின் "டெட்ராயிட் ஆக தமிழ்நாடு விளங்கு கிறது என்பது நிரூ பிக்கப்பட்டுள்ளது.



அரியலூர் ராஜாஜி நகரில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பவளவிழாவை முன்னிட்டு கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுரையின்படி தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் 'கலைஞர் இல்லத்தில் இல்லந்தோறும் கழக கொடியேற்றும் நிகழ்ச்சியில் கழகத்தின் மூத்த உறுப்பினரும், நகர பொருளாளருமான இராஜேந்திரன், கழக இருவண்ணக் கொடியை ஏற்றி வைத்தார். உடன் அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட துணைச் செயலாளர் சி.சந்திரசேகரன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கோ.அறிவழகன், மா.அன்பழகன், நகரச் செயலாளர் இரா.முருகேசன், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.